தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.4 நாள் 13.11.2025

| SC. No. | 76/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார் | த/பெ. | பாலகுரு |
| வயது | 40 | தொழில் | மெக்கானிக் |
| கிராமம் | கற்கோவில் | தாலுக்கா | சீர்காழி |

**(மற்ற எதிரிகள் ஆஜர், 3 மற்றும் 6ம் எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது கற்கோவிலில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 1 வருடத்திற்கு முன்பு மதியம் சுமார் 3.00 மணியளவில் வைத்தீஸ்வரன் காவல் நிலைய போலீசார் எனது கடைக்கு முன்பு வந்து படம் வரைந்தார்கள். ஹான்ஸ் வழக்கு சம்மந்தமாக என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அந்த பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.8** ஆகும். ரமேஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.9** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.10** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

B. Suresh Kumar

CJM, MAYILADUTHURAI.

கடந்த 13.06.2024 அன்று மதியம் 12.45 மணியளவில் நானும், கோபிநாத் என்பவரும் கற்கோவில் அருகில் விநாயகன் நகருக்கு சென்றபோது வைத்தீஸ்வரன் கோவில் காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவரை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. ரமேஷ் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், கோபிநாத் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் TN518Q30418 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனம் மற்றும் TN82L2038 HONDA ACTIVA என்ற இருச்சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் நானும், கோபிநாத் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் அனைத்தும் நேரடியாக தெரிந்தும், உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

B. [signature]

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 13/11/24

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.5 நாள் 13.11.2025

| SC. No. | 76/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | த/பெ. | ரெத்தினம் |
| வயது | 49/25 | தொழில் | காவல்துறை |
| கிராமம் | திருச்சிற்றம்பலம் | தாலுக்கா | சீர்காழி |

**(மற்ற எதிரிகள் ஆஜர், 3 மற்றும் 6 ம் எதிரி ஆஜர் இல்லை.**
**பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2024 அன்று மேற்படி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது எங்கள் காவல் நிலைய ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் அன்று காலை 9.30 மணியளவில் கற்கோயில் முத்துராஜா பள்ளி அருகே இருந்த முத்துராஜா பெட்டிக்கடைக்கு காவல் ஆய்வாளருடன் நானும், பெண்காவலர், மற்றும் காவலர்கள் விஷ்ணு, கலைமணி ஆகியோருடன் சென்று சோதனை செய்தபோது அரசால் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் 12 கிலோ ஹான்ஸ் வைத்திருந்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 11.30 மணிக்கு மேற்படி 12 கிலோ ஹான்ஸை கைப்பற்றியும், சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார். முத்துராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்று விநாயகர் நகர் சென்று ரமேஷ், விக்டோரியா வீட்டிற்கு சென்று அவர்ளது வீட்டு வாசலில் நின்ற பொலிரோ பிக்அப் வாகனத்தை சோதனை செய்தபோது அந்த வாகனத்தை விஜயகுமார் என்பவர் ஓட்டுநராகவும், சரவணன் என்பவர் கிளினராகவும் இருந்தது தெரியவந்தது. அந்த நான்கு வாகனத்தில் 750

CJM, MAYILADUTHURAI.

கிலோ ஹான்ஸ், கூலிப் போன்ற புகையிலை பொருட்கள் இருந்தது. மேற்படி எதிரிகளை கைது செய்து ரமேஷ் என்பவர் தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, எதிரிகள் பயன்படுத்திய நான்கு சக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். எதிரிகள் பின்னர் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 179/2024 வழக்கு பதிவு செய்தார். நான் உடனிருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

ரோந்து செல்வது குறித்து பாக்கெட் நோட்டு உள்ளது என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியில் ரோந்து குறித்த விபரங்களை குறிப்பு எழுதுவோம் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளர் வசம் விசாரணையின் போது ஒப்படைத்தேன் என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றேன். சம்பவ இடத்தில் 2.30 மணிநேரம் இருந்தோம். மகசர், ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர் ஆகியவற்றை ஆய்வாளர் எழுதினார். அனைத்து ஆவணங்கைளும் கையால் எழுதப்பட்ட ஆவணங்கள்தான். சம்பவ இடத்தில் உள்ள வீடு தனி வீடு வேறு வீடுகள் எதுவும் கிடையாது. பார்வை மகசர், வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை தயார் செய்துஅதன் பிறகு காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு பதிவு செய்யும்போது குற்ற எண் கொடுப்போம் என்றால் சரிதான். ஆவணங்களில் குற்ற எண் குறிப்பிடப்பட்ருந்தால் அந்த ஆவணங்கள் வழக்கு பதிவிற்கு பிறகு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள்தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு பதிவு செய்யப்பட்டபிறகு தான் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது. வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதாக குறிப்பு இருந்தால் அது தவறு. இந்த ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனி நபர்களோ அல்லது பள்ளி நிர்வாகத்தினரோ புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல் தடைசெய்யப்பட்ட பொருட்கள்

CJM, MAYILADUTHURAI.

13/11/25

எதுவும் 1ம் எதிரியால் விற்பனை செய்யப்படவில்லை என்றாலும், அதனால் தான் புகார் எதுவும் தனிநபர்கள் மற்றும் பள்ளி நிர்வாகமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எந்த வித தடயபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னிடம் தனிஅறிக்கை பெறவில்லை, மற்றவர்களிடம் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. நானும் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், ஆய்வாளருடன் பயணிக்கவில்லை என்றாலும் அதனால் தான் மற்றவர்களிடம் அறிக்கை பெற்றரா என்றால் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் என்றாலும், எதிரிகளிடமிருந்து எந்தவித தடயபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகள் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

13/11/25

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/11/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.